பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

09 05 2026 SATURDAY 12 40 PM

தலைப்புச் செய்திகள்

1. மேற்குவங்க முதலமைச்சராக பிஜேபியின் திரு. சுவேந்து அதிகாரி இன்று பதவியேற்றார்.

2. முப்படைகளின் தளபதியாக லெப்டினென்ட் ஜென்ரல் ராஜா சுப்பிரமணி நியமிக்கப்பட்டுள்ளார்.

3. பிரதமரின் 3 காப்பீட்டு திட்டங்களில் இதுவரை 94 கோடி பேர் இணைந்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

4. வேளாண் துறையின் நீடித்த வளர்ச்சிக்கான தேசிய இயக்கத்தின் கீழ், மத்திய அரசு இதுவரை 2 ஆயிரத்து 119 கோடி ரூபாயை விடுவித்துள்ளது.

5. உலக கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Veer Chotrani இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

மேற்குவங்க முதலமைச்சராக பிஜேபியின் திரு. சுவேந்து அதிகாரி இன்று பதவியேற்றார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அம்மாநில ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

திரு. Nisith Pramanik, திரு.Dilip Ghosh, திரு. Kshudiram Tudu, திரு. Ashok Kirtania, திருமதி. Agnimitra Paul உள்ளிட்டோர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திரு. ராஜ்நாத் சிங், பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின் உள்ளிட்டோர் பதவியேற்பு விழாவில் பங்கேற்றனர்.

மேற்குவங்க சட்டப்பேரவை தேர்தலில் பிஜேபி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை பெற்றது.

294 உறுப்பினர்களைக் கொண்ட அம்மாநில சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் பிஜேபி 207 தொகுதிகளில் வெற்றிபெற்றது.

Falda தொகுதியில் மட்டும் வரும் 21ஆம் தேதி மறுவாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இந்த தேர்தலில் 15 ஆண்டுகாலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த திரிணமுல் காங்கிரஸ் 80 தொகுதிகளில் மட்டுமே வெற்றிபெற்றது.

>>>>>><<<<<<

தமிழகத்தில் த.வெ.க. புதிய அரசு அமைப்பதில் தொடர்ந்து தேக்கநிலை நீடிக்கிறது.

அறுதிப்பெரும்பான்மைக்கு இரண்டு உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில், அக்கட்சி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஆதரவை எதிர்நோக்கியுள்ளது.

இது தொடர்பான முடிவினை இன்று அறிவிக்கவுள்ளதாக விடுதலை சிறுத்தைகள் கட்சி கூறியுள்ளது.

இதற்கிடையே, பெரும்பான்மை ஆதரவை பெறுவதற்காக த.வெ.க. குதிரை பேரத்தில் ஈடுபடுவதாக அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் குற்றம் சாட்டினார்.

இந்நிலையில், தமிழகத்தில் ஆட்சியமைக்க ஆதரவு வேண்டுமென்றால் தேசிய ஜனநாயக கூட்டணியை நாடக்கூடாது என்ற இடதுசாரி கட்சிகளின் நிபந்தனையை த.வெ.க மீறியுள்ளதாக திமுக குறைகூறியுள்ளது.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள திமுக, அமமுக உறுப்பினரின் ஆதரவை த.வெ.க. கோரியதை சுட்டிக்காட்டியுள்ளது.

>>>>>><<<<<<

கேரளாவில் புதிய அரசு அமைப்பது தொடர்பாக காங்கிரஸ் தொடர்ந்து ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறது.

இதுதொடர்பாக, கேரளாவைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியின் மூத்த நிர்வாகிகள் திரு. சதீசன், திரு. ரமேஷ் சென்னிதலா, கேரள காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. சன்னி ஜோசப் ஆகியோர், புதுதில்லியில் அக்கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜூன கார்கே மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தியை இன்று சந்திக்கவுள்ளனர்.

இந்த சந்திப்பின் போது, புதிய முதலமைச்சரை தேர்வு செய்வது குறித்து விவாதிக்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

140 உறுப்பினர்களை கொண்ட, கேரள சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி 102 இடங்களில் வெற்றிபெற்று ஆட்சியை கைப்பற்றியது.

>>>>>><<<<<<

முப்படைகளின் தளபதியாக லெப்டினென்ட் ஜென்ரல் ராஜா சுப்பிரமணி நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பொறுப்பினை தற்போது வகித்து வரும் அனில் சௌஹானின் பதவிக்காலம் வரும் 30ஆம் தேதியுடன் முடிவடைவதை ஒட்டி இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ராணுவ விவகாரங்கள் துறையின் செயலராகவும் லெப்டினென்ட் ஜென்ரல் ராஜா சுப்பிரமணி பணியாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு குழுமத்தின் ராணுவ ஆலோசகராக தற்போது அவர் பணியாற்றி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

*பிரதமரின் 3 காப்பீட்டு திட்டங்கள், 11 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.*

*இதுதொடர்பாக புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.*

*பிரதமரின் விபத்து காப்பீட்டுத் திட்டம், ஆயுள் காப்பீட்டுத் திட்டம் மற்றும் அடல் ஓய்வூதிய திட்டங்களில் 94 கோடி பேர் இணைந்துள்ளதாக அவர் கூறினார்.*

*ஆயுள் காப்பீட்டு திட்டத்தின்கீழ் இதுவரை 21 ஆயிரத்து 500 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், 10 லட்சத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*பிரதமரின் விபத்து காப்பீட்டு திட்டத்தின் கீழ், 660 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் 1 கோடியே 84 லட்சம் குடும்பங்கள் பயனடைந்திருப்பதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.*

*இந்நிகழ்ச்சியில் பேசிய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி, ஏழை மக்களுக்கு காப்பீட்டு வசதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.*

*இந்த திட்டங்கள் முழுமையாக டிஜிட்டல்மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இதன் காரணமாக, பயனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி இழப்பீட்டுத் தொகை பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. பங்கஜ் சௌத்ரி கூறினார்.*

*>>>>>><<<<<<*

*வேளாண் துறையின் நீடித்த வளர்ச்சிக்கான தேசிய இயக்கத்தின் கீழ், இதுவரை 2 ஆயிரத்து 119 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*இதன்மூலம் 14 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்திருப்பதாக வேளாண் துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*இந்த இயக்கத்தின் கீழ் கடந்த நிதியாண்டில் 97 லட்சம் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதன் வளம் குறித்து பரிசோதிக்கப்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*அதன் அடிப்படையில் மண் வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*ரவீந்திரநாத் தாகூரின் 165வது பிறந்த தின கொண்டாட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.*

*இதனையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள் பலர் வாழ்த்துச் செய்தி விடுத்துள்ளனர்.*

*>>>>>><<<<<<*

*தொழிலாளர்கள் நலனுக்கான 4 புதிய சட்டங்கள் முழுமையாக செயல்பாட்டுக்கு வந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*இதற்கான விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளதாக தொழிலாளர் நலத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்ய இந்த சட்டங்கள் பயனளிக்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*டிரினிடாட் டொபேகோவுடனான நல்லுறவு பாரம்பரியமிக்கது என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.*

*அரசுமுறைப் பயணமாக அந்நாட்டிற்கு சென்றுள்ள அவர், இருநாடுகளுக்கு இடையே கலாச்சாரம், விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் ஒற்றுமை காணப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.*

*இருநாடுகளுக்கு இடையேயான உறவை வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்து அந்நாட்டு பிரதமருடனும் டாக்டர் ஜெய்சங்கர் பேச்சு நடத்தினார்.*

*இதன்பின்னர், பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தானதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>>><<<<<<*

*மேற்குவங்கத்தில் குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்திற்காக 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.*

*இதற்கான ஒப்பந்தத்தில் மேற்குவங்க அரசு கையெழுத்திட்டவுடன் இந்த தொகை விடுவிக்கப்படும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*>>>>>><<<<<<*

*இலங்கையின் காங்கேசன்துறையிலிருந்து நாகப்பட்டிணம் நோக்கி வந்து கொண்டிருந்த பயணிகள் கப்பல், மோசமான வானிலை காரணமாக, நடுக்கடலில் பழுதடைந்தது.*

*கடலோர பாதுகாப்பு படையினர் மீட்பு பணிகளை மேற்கொண்டு, பயணிகளை பாதுகாப்பாக மீட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் 57 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

பஞ்சாபில் அம்மாநில தொழில்துறை அமைச்சர் திரு. சஞ்சீவ் அரோராவின் கூட்டாளிகளுக்கு சொந்தமான இடங்களில் அமலாக்க துறையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

நான்கு இடங்களில் இந்த சோதனை நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, அமலாக்கத் துறையை மத்திய அரசு தவறாக பயன்படுத்தி வருவதாக பஞ்சாப் முதலமைச்சர் திரு. பகவத்மான் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், கடந்த ஓராண்டிற்குள் 3 முறை அமலாக்கத்துறை இதுபோன்ற சோதனையில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<<

சிலி வெளியுறவு அமைச்சர் திரு. Francisco Perez Mackenna ஆறுநாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

மத்திய அமைச்சர்கள் திரு. பியூஷ் கோயல், டாக்டர் ஜெய்சங்கர் ஆகியோருடன் அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

>>>>>><<<<<<

உலக கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Veer Chotrani இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

எகிப்தின் Giza-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல்சுற்று ஆட்டத்தில் அவர், 14-12, 8-11, 5-11, 11-7, 11-2 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Abhay Singh-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

Kansas-ல் நடைபெற்ற சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Tejaswin Shankar வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் உயரம் தாண்டுதல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>><<<<<<

ஸ்வீடனில் நடைபெற்ற Tepe Siegman செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் எரிகைஸி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

**>>>>>>END<<<<<<**